//

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No. CC.No.40/2017**

**prosecution witness: PW-6**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

**Accused present.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரெய்மண்ட் | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

<u>25.09.2024</u>

<u>முதல் விசாரணை:-</u>

நான் அக்காள்மடத்தில் வசித்து வருகிறேன். கடல் தொழில் செய்து வருகிறேன். கடந்த 01.12.2016ம் தேதி நான் தங்கச்சிமடம் காவல்நிலையத்தில் இருந்தபோது போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது ஆகும். அது **அ.சா.ஆ.3** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்ட்டது.)**

<u>**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

போலீசார் விசாரணையில் கடந்த 01.12.2016ம் தேதி காலை 06.00 மணியளவில் நானும், பிளமிங் என்பவரும் மதுரை-இராமேஸ்வரம் மெயின்ரோட்டில் பேக்கரும்பு அப்துல் கலாம் சமாதிக்கு மேல்புறம் உள்ள ஆஞ்சநேயர் கோவில் முன்பு நின்று கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது அங்கு வந்த தங்கச்சிமடம் காவல்நிலைய ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயாா செய்தார் என்றால் சரியல்ல. அந்த பார்வை மகஜரில் நானும், பிளமிங் என்பவரும் கையொப்பம் செய்ததாக போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.09.25 17:30:33 +0530